


Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 163

செவ்வாய்க்கிழமை
07 மே 2024

சித்திரை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

யாழ்ப்பாணம் போதனாவில் மட்டும்

# வெப்பம் காரணமாக நால்வர் உயிரிழப்பு!



## மருத்துவர்கள் நேற்று அதிர்ச்சித் தகவல்

**யாழ்ப்பாணம், மே 7**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்கள் சிலர் வெப்பம் மற்றும் வெப்ப அலை காரணமாக ஏற்படும் 'ஹீட் ஸ்ரோக்' காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொதுமருத்துவ நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்துள்ளார்.**

11

# யாழ். போதனாவில் ஆளணிக் குறைவு!

## விரைவில் தீர்வு தேவை பணிப்பாளர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்த ஆளணிப் பற்றாக்குறை விரைவில் நிவர்த்திக்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் செயற்றிறனை மென்மேலும் வலுப்படுத்த ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்திப்படுத்தவேண்டும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்

11

தெல்லிப்பழைப் படுகொலை;

# அம்மாவின் கழுத்தை நெரித்துக் கொன்றேன்

## பொலிஸாரிடம் சரணடைந்த மகன் விசாரணையின்போது தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

தெல்லிப்பழை, துர்க்காபுரத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 4ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், அவரைத் தானே கழுத்தை நெரித்துக் கொன்றதாக அந்தப் பெண்ணின் மகன் பொலிஸாரிடம் சரணடைந்து வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கனடி ஜஸ்மின் (வயது-37) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சடலம் மீட்கப்பட்ட பின்னர், அவருடைய 16 வயது மகனைக் காணவில்லை என்று தெரிவித்த பொலிஸார்

11

# மல்லாகத்தில் சட்டவிரோதமான கொல்களம் முற்றுகைக்குள்

## கால்நடைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் - மல்லாகம் பகுதியில் இயங்கிவந்த சட்டவிரோதக் கொல்களம் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினரால்

11

# தண்டுவடம் பாதித்த பெண் பாலியல் கொடுமையால் சாவு!

கிளிநொச்சி, மே 7

போரின்போது படுகாயமடைந்து தண்டுவடம் பாதிக்கப்பட்டு, தாயின் பராமரிப்பில் இருந்துவந்த பெண்ணொருவர் கடந்த மூன்றாம் திகதி உயிரிழந்துள்ளார். அவர் போதைக்கு அடிமையான ஒருவரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று விசாரணை

11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனொளிபாதமலையில் இனி சுற்றுலாவிகளுக்கே அனுமதி

கொழும்பு,மே 7

சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் நிறைவடைந்த பின்னர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் என சப்ரகமுவ மாகாண பிரதான சங்கைக்குரிய தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்துள்ளார். சுற்றுச்சூழல் பாதிப்பை கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் விசாகப் பூரணை தினத்துடன் சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## கைபேசிக்கு அடிமையாதலால் உருவாகும் வன்முறைச் சமூகம்

### மருத்துவர்கள் எச்சரிக்கை

**கொழும்பு,மே 7**

**கைபேசிகளுக்கு எல்லையற்ற விதத்தில் தற்போதைய குழந்தைகள் அடிமையாகி வருவதால் உறவுகளுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு வன்முறைமிக்க ஒரு பரம்பரை உருவாகின்றது - இவ்வாறு குழந்தைகள் மனநல விசேட மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

சுமார் 10 இலட்சம் குழந்தைகள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ளனர்.

முதலில் கையடக்கத் தொலைபேசிகளில் விளையாட்டுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அநேக குழந்தைகள் தற்போது யூடியூப், இன்ஸ்டாகிராம், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களுக்கும் அதிகளவில் அடிமையாகியுள்ளனர்.

கையடக்கத் தொலைபேசிகளில் அதிகளவில் நேரத்தைக் கடத்துவது சிகிச்சை பெறவேண்டிய ஒரு மனநோய்.

அலைபேசிகளில் குழந்தைகள் அதிகளவில் நேரத்தைக் கடத்துவதால் கண் பார்வையில் பிரச்சினை, மனநிலை பாதிப்புகள் போன்ற பல நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

அத்துடன் பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் காணப்பட்ட அவர்களின் தொடர்பு துண்டிக்கப்படும் அதேவேளை, வன்முறைமிக்க ஒரு பரம்பரையும் சமூகத்தில் தோற்றம் பெறுகின்றது என்றும் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். (ச-இ)

## விடுவிக்கப்பட்ட மீனவர்களை நாட்டுக்கு அழைத்துவாருங்கள்

### வடக்கு கடற்றொழிலாளர் இணையம் கோரிக்கை

மன்னார், மே 7

இந்தியக் கடற்பரப்பில் நுழைந்த நிலையில் கைது செய்யப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 5 மீனவர்களையும் நாட்டுக்கு அழைத்து வர கடற்றொழில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை எவ்வித முனைப்பும் காட்டவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலர் என்.எம்.ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தலைமன்னாரிலிருந்து கடந்த ஆண்டு கடற்றொழிலுக்குச் சென்ற 5பேர் தமிழக கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்ட காலம் முதல் அவர்கள் விடுவிக்கப்பட்ட காலம் வரை சுமார் 6 மாதங்கள் அவர்கள் தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் எவரும் அக்கறை செலுத்தவில்லை.

அவர்களை இலங்கைக்கு அழைத்து வர விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஒ-56)



## பணப்பை திருட்டு பொலிஸ் கைது!

கொழும்பு,மே 7

ஆடை விற்பனை நிலையமொன்றில் பெண்ணொருவரின் பணப்பையைத் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கண்டி குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆடைவிற்பனைநிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா காட்சியின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

பொக்காவல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## கட்டுநாயக்காவில் நடந்தது என்ன?

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் விளக்கம்

கொழும்பு, மே 7



கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய வளாகத்தில் விசா வழங்கும் சர்ச்சைக்குரிய வி.எவ்.எஸ். நிறுவனம் இந்திய நிறுவனம் அல்ல என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். அது பிளாக் ஸ்டோன் குழுமத்துக்குச் சொந்தமான ஒரு சர்வதேச நிறுவனம் என்றும், அதன் பங்குதாரர் ஜேர்மனியில் இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கட்டுநாயக்கா - பண்டாரநாயக்க விமான நிலைய வளாகத்தில் இலங்கைப் பயணி ஒருவரின் நடத்தை தொடர்பான சர்ச்சைக்குரிய காணொலி மூலம் மேற்படி நிறுவனம் இந்திய நிறுவனம் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் விசா வழங்கல் நடவடிக்கை இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமைச்சர் இது தொடர்பில் விளக்கமளித்துள்ளார். (ஒ-இ)

## ஹமாஸ் அலுவலகத்தை மூடுவதாக கட்டார் தீர்மானம்

கட்டார், மே 7

கட்டாரிலுள்ள ஹமாஸ் அலுவலகத்தை மூடுவதற்கு கட்டார் அரசு தீர்மானித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்குமிடையே சமாதானத் தூதுவராக கட்டார் செயற்பட்டு வருகிறது. இந்தநிலையில் யுத்த நிறுத்தத்துக்குக் ஹமாஸ் உடன்படாத பட்சத்தில் கட்டாரிலுள்ள ஹமாஸ் அலுவலகத்தை மூடி விடுமாறு அமெரிக்கா தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்டாரிலுள்ள ஹமாஸ் அலுவலகத்தை மூடுவது பற்றி மீள் பரிசீலனை செய்த பின்னரே இந்த முடிவுக்கு வந்ததாக கட்டார் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2012 ஆம் ஆண்டு முதல் கட்டார் அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஹமாஸ் தலைவர்கள் கட்டாரில் சுதந்திரமாக நடமாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-6)

## இலவச விசா: குழு நியமனம்

இலவச சுற்றுலா விசாக்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்காக இலங்கை அரசாங்கம் ஒரு நிபுணர் குழுவை உருவாக்கியுள்ளது. மற்ற நாடுகள் இதேபோன்ற திட்டங்களை எவ்வாறு செயற்படுத்தியுள்ளன என்பதை ஆய்வு செய்து, சுற்றுலா மற்றும் தொடர்புடைய துறைகளில் அவற்றின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்யும் பணியை இந்தக் குழு மேற்கொள்ளும். (ஒ-இ)

## பிள்ளைகளை பணயக்கைதியாக்கியவர் விசேட அதிரடிப்படையால் கைது

கொழும்பு, மே 7

ஹங்வெல்ல பிரதேசத்தில் தனது இரண்டு பிள்ளைகளை பணயக் கைதிகளாக வைத்திருந்த தந்தையொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவியைக் கொல்வதற்காக கைக்குண்டுடன் வீட்டுக்குச் சென்ற போது அவரது மனைவி தப்பி ஓடியுள்ளார். அதனால் தனது இரண்டு பிள்ளைகளையும் வீட்டின் அறையொன்றில் பணயக்கைதிகளாக வைத்திருந்துள்ளார். 10 வயதுச் சிறுமியும், இரண்டு வயது ஆண் குழந்தையையுமே இவ்வாறு பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைய உடனடியாகச் செயற்பட்ட ஹங்வெல்ல பொலிஸ் அதிகாரிகள் குழுவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் சம்பவ இடத்துக்குச் சென்று குழந்தைகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

ஒரு மணி நேரப் போராட்டத்துக்கு பின்னர் பொலிஸ் அதிரடிப் படையினர் குழந்தைகளை மீட்டுள்ளனர்.

பின்னர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறித்த நபரை கைது செய்துள்ளனர். (ஒ-இ)

## போராட்டம் நடத்திய பட்டதாரிகள் கைது

கொழும்பு, மே 7

மாகாணசபை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை மாகாணசபை கட்டடத்துக்குள் அடைத்து, நுழைவு மற்றும் வெளியேறும் கதவுகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 22 வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகளே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டச் செயலர்கள் தொடர்பில் இதுவரை பெரிய முறைப்பாடுகளில்லை!

## முன்னாள் துணைவேந்தர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 7

**யாழ். மாவட்டத்தில் இதுவரை கடமையாற்றிய மாவட்டச் செயலர்கள் தொடர்பில் எந்தவொரு பெரிய முறைப்பாடுகளும் இல்லை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் 1961ஆம் ஆண்டில் பெரும் சத்தியாக்கிரகப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் 1977ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகம் சிங்களவர்களின் கைகளில் இருந்தது. அதன்பின்னர் மாவட்ட அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டு, யாழ்ப்பாண மாவட்டச் செயலக நிர்வாகத்தின் உயர் பதவியிலுள்ளவர் மாவட்டச் செயலாளர் எனப் பெயர் மாற்றப்பட்டது. அன்று முதல் இன்றுவரை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர்களாகப் பலரும் கடமையாற்றியிருக்கின்றனர். இவர்கள் மீது அவ்வப்போது சில விமர்சனங்கள் இருந்தன. ஆனால், பெரிய முறைப்பாடுகள் எதுவும் இல்லை. இது தொடர்பில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம் - என்றார். (ம-66)

# சுகாதார விதிமீறல்கள்; உணவகங்கள் சிக்கின

யாழ்ப்பாணம்,மே 7

சாவகச்சேரியில் சுகாதார விதிமுறைகளை மீறிய மூன்று உணவு கையாளும் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு, கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர் தொடக்கம் மீசாலை வரையிலுள்ள உணவுகையாளும்நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டது. இதன்போதே தனிநபர் சுகாதாரம் பேணாமை மற்றும் மருத்துவச் சான்றிதழ் இன்றி பணியாற்றியமை ஆகிய குற்றங்களுக்காக 3 உணவகங்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ச-9)



# சிறி சபாரத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வு

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கோண்டாவில் அன்னங்கை பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

ரெலோ இயக்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ப-66)

# வற்றாப்பளை பொங்கல் வியாபார அறிவுறுத்தல்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தையொட்டி ஆலய வளாகத்தில் அமைக்கப்படவுள்ள உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. உணவு கையாளும் நிலையங்கள் அனைத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஐஸ்கிறீம் உணவகங்கள், தேநீர், பூந்தி இனிப்பு, மிக்சர், சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

காவடி உரிமையாளர் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனுமதிபெற்ற ஐஸ்கிறீம் கடைகளில் மாத்திரமே ஐஸ்கட்டிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். அதற்கான பற்றுச்சீட்டை தம்வசம் வைத்திருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)

# பாக்குத்தெண்டல் உற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப பாக்குத்தெண்டல் உற்சவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை கடல்நீர் தீர்த்தம் எடுத்தல் நிகழ்வும், 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காட்டா விநாயகர் பொங்கலும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-19)

# கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 7

வவுனியா பொலிஸாரால், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை முன்னெடுக்கப்பட்ட திடீர் விசேட நடவடிக்கையின் போது, 30 கிலோ 500 கிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் திடீர்ச் சோதனை நடவடிக்கையை மருதங்கேணிப் பகுதியில் முன்னெடுத்தனர். இதன்போது போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 36, 35 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ப-18)

# புதினம் தெரியுமோ?

எப்ப ஆர் சாவினம் எண்டு பார்த்துக் கொண்டிருக்கிற சில கடைக்காரரைப் பற்றி உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். சவப்பெட்டி விக்கிறவையைத்தான் அப்பிடிச் சொல்லுறது. முந்தியெல்லாம் எங்களிட்ட உந்தச் சவப்பெட்டிச் சம்பிரதாயம் இருக்கேலை. தென்னோலையில செய்த பன்னாங்குப் பாடையிலதான் செத்தவையைச் சுடலைக்கு கொண்டு போறது வழக்கம். பிறகு உந்த வெள்ளைக்காரன் வந்த பிறகு மெல்ல மெல்ல சவப்பெட்டிச் சம்பிரதாயம் எங்களிட்டையும் வந்து. அப்பிடியே வெளிநாட்டுக் காசுகள் வரவர கட்டாயம் சவப்பெட்டியிலதான் செத்தவையை சுடலைக்கு கொண்டு போகோணும் எண்டளவுக்கு நிலைமை மாறிட்டுது. அதால ஆரும் செத்த உடன முதல் செய்யிற வேலை, சவப்பெட்டி வாங்கப் போறதுதான்.

சவப்பெட்டிக்காரரும் இப்ப நல்ல பிஸ்னஸ் தெரிஞ்ச ஆக்கள். வீட்டில செத்தவைக்கு ஒரு ரேட்டும், ஆஸ்பத்திரியில செத்தவைக்கு இன்னொரு ரேட்டும் வைப்பினம். வீட்டில செத்தவையின்ர சொந்தக்காரர் போனால், ஆற அமர நாலைஞ்சு கடை ஏறி இறங்கித்தான் சவப்பெட்டி வாங்குவினம். ஆனால் ஆஸ்பத்திரியில செத்தவையின்ர சொந்தக்காரர் அப்பிடியில்லை. நெருங்கின ஆக்கள்தான் ஆஸ்பத்திரியில நிப்பினம். அவைக்கு தங்கட சொந்தக்காரர் செத்ததே பெரிய இடியா இருக்கும். அந்த நேரத்தில கடைக்காரர் காட்போர்ட் மட்டையில செய்த பெட்டியை காட்டி, 'நாப்பதாயிரம் ரூபா' எண்டு சொன்னாலும் கேட்டுக் கேள்வியில்லாமல் வாங்கிக் கொண்டு வந்திடுவினம். அப்பிடி ஆஸ்பத்திரியில சாகிறவையின்ர குடும்பத்தை அமத்திக் குத்தி, அறாவிலைக்கு பெட்டியை விக்கிறதுக்கெண்டே ஆஸ்பத்திரி வாசலில தங்கட ஆக்களை சம்பளம் குடுத்து உந்தக் கடைக்காரர் வைச்சிருக்கினம்.

அதைவிட ஆஸ்பத்திரியில வேலை செய்யிற சிலரும் 'இன்னார் முடியப் போகுது', 'இப்ப ஒராள் செத்திட்டுது' எண்டு போனில தகவல் குடுப்பினம். அவ்வளவுதான். வீட்டுக்காரருக்கே தங்கட சொந்தக்காரர் செத்த தகவல் தெரியமுதல் 'நான் முந்தி, நீ முந்தி' எண்டு சவப்பெட்டிக்கார ஆக்கள் மொய்ச்சுப் போடுவினம். ஒருமாதிரி செத்தவீட்டுக் காரரின்ர மண்டையைக் கழுவி, பெட்டியோட 'என்போம்' பண்ணுறதுக்கும், அப்பிடியே பிணத்தை வீட்டை கொண்டு போய்க் குடுக்கவும், செத்தவீட்டுக்கு தங்கட பாண்ட் கோஷ்டியோட பிணத்தை சுடலைக்கு கொண்டு போகவும் ஒரு 'பக்கேஜை' சொல்லி சம்மதிக்க வைச்சுப் போடுவினமாம். செத்தவீட்டுக்காரர் 'இல்லை வேண்டாம், நாங்கள் வேற கடையில பாக்கிறம்' எண்டால் வெருட்டுற மாதிரி கதை மாறுமாம். 'சரி அங்கால எடுக்கிறதைப் பாப்பம்' எண்டு சண்டித்தனம் காட்டுறதால பயத்திலையும் ஓமெண்ட வேண்டி இருக்கெண்டு சனம் புலம்புது. அதைவிட தாங்கள் பிணத்தை 'என்போம்' பண்ணேக்க வெட்டிக் கொத்துறதையும் வீடியோ, போட்டோ எடுத்து ரிக்ரொக்கில போடுற வேலையளும் நடக்குதாம். ஒருக்கா உரியவை உந்தக் கடைக்காரரை கொஞ்சம் அமத்தி வைக்க மாட்டினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 7

நாடளாவியரீதியில் 2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்தப் பரீட்சை 3 ஆயிரத்து 527 நிலையங்களில் ஆரம்பமாகியுள்ளதுடன், 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். கிளிநொச்சி தெற்கு மற்றும் வடக்கு கல்வி வலயங்களில் இந்த ஆண்டில் 33 பரீட்சை நிலையங்களில் 4 ஆயிரத்து 26 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். பரீட்சை நிலையங்கள் இணைப்பு செய்யும் வகையில் 10 இணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 111 பரீட்சைநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் 13 ஆயிரத்து 902 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

வவுனியாவில் 4 ஆயிரத்து 309 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதுடன் அவர்களுக்காக 40 பரீட்சைநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ம-ப-113-110-18)

## பெயர் மாற்றம்

928344207V எனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய தவராசா கமலதர்சினி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை தவராசா கார்த்திகா என மாற்றுகின்றேன் என்பதை இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன். (CS 00435) S-1

-தவராசா கார்த்திகா-

## முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவைகளுள் முதியோர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் சேவையும் ஒன்றாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும்
தனித்துவமான முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்

இவ் இல்லமானது.....

* மலசலகூட வசதிகளோடு இணைந்த அறை
* 24 மணி நேர வைத்திய சேவை
* 24 மணி நேர தாதிய சேவை
* ஊட்டச்சத்தான சைவ, அசைவ உணவுகள்
* பொழுதுபோக்கு வசதிகள், சொகுசு இருக்கைகள்
* **Physiotherapy** வசதிகள்
* ஆலய தரிசனம்

ஆகியவற்றைக் கொண்டுள்ளது.


**100%** மருத்துவ பராமரிப்பின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய முதியோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட அறைகள் மட்டுமே உள்ளது. **முற்பதிவுகளுக்கு 0772380196**

தலைவர்
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை
தெல்லிப்பளை (துர்க்கை அம்மன் கோவில் முன்பாக)

# மரண அறிவித்தல்

மலர்வு 09 . 07 . 1943



உதிர்வு 06 . 05 . 2024

## சரவணமுத்து தர்மலிங்கம்

**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)**

மீசாலை வடக்கு, மீசாலையயைச் சேர்ந்த சரவணமுத்து தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்) அவர்கள் நேற்று (06.05.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பூலோகநாயகியின் பாசமிகு கணவரும், சுதாகரன் (உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர், CTB), சுகந்தினி (வவுனியா சரஸ்வதி முன்பள்ளி ஆசிரியர்), கிருபாகரன் (லண்டன்), பிரபாகரன் (மருந்து கலவையாளர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை), ஜெயமாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்ஷினி (பிரதி அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை), கணேமூர்த்தி (வவுனியா), அனுஷியா (லண்டன்), சசிந்தா (ஆசிரியர், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்), அஜித்காந் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், யதிஷா (NDT, மொறட்டுவ பல்கலைக்கழகம்), டிவாகன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிசிந்தன் (கனடா), நிலக்சன், அபிலாஸ் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), அபிநயா (லண்டன்), அட்சயன் (லண்டன்), கவிநயா (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), புவனியா (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), இனியா, அனுருத் (பிரான்ஸ்), அபிசேக் (பிரான்ஸ்), அரிஜித் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, மீசாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**சுதா - 077 716 8518**
**சுகந்தி - 077 839 0959**
**கிருபா - +447576124098**
**பிரபா - 077 958 7134**
**மாலினி - +33695840441**

(CR 42175) S-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## லலிதாதேவி மார்க்கண்டு

**(அம்மாச்சி)**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீங்கள் அணைந்த நாளிலிருந்து எங்களின் வாழ்க்கை இருள் அடைந்துவிட்டது. எங்களின் பிரகாசமான வாழ்க்கைக்கு முதல்வியாகவும், எங்கள் குடும்பத்தின் ஆணி வேராகவும் இருந்தீர்கள். உங்களை இழந்த பின்பு வேர் அறுந்த மரங்களாக வாடி வதங்குகின்றோம். நீங்கள் இருந்த இடத்தை நிரப்புவதற்கு இங்கு எவரும் இல்லை. இனிமேலும் வரப்போவதும் இல்லை. உங்களை நினைத்து ஆறாத் துயரில் கண்ணீர் வடிக்கின்றோம்.

உங்களின் பெற்றோருக்கு சிறந்த மகளாகவும், உடன் பிறந்தோருக்கு உண்மையான சகோதரியாகவும், கணவனுக்கு அன்பான மனைவியாகவும், பிள்ளைகளுக்கு பாசமான தாயாகவும், மருமக்களிற்கு அன்பான மாமியாகவும், பேரப்பிள்ளைகளிற்கு பாசம் மிகுந்த பேர்த்தியாகவும், பூட்டப்பிள்ளைகளிற்கு புன்னகை கலந்த பாசமுள்ள பூட்டியாகவும், மாமன், மாமிக்கு சிறந்தொரு மருமகளாகவும், உறவினர் எல்லோருக்கும் அன்பான மச்சாள், மாமி, விருந்தோம்பலில் சிறந்தவராகவும் வாழ்ந்து காட்டிய உங்களை காலன் கவர்ந்து சென்று ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது. நாங்களோ உங்களை நினைத்து மனம் உடைந்து கண்ணீர் சிந்திய வண்ணம் இருக்கின்றோம். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

எங்களின் துக்கத்தில் பங்கெடுத்தவர்களுக்கும், அத்துடன் தூரதேசத்தில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னையின் மடியில் 25.03.1950

ஆண்டவன் நிழலில் 20[illegible]

நொச்சியடி முடக்கு,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(CS/54955) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# குழப்புவோர் ஒதுங்குவார்களா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கும் விடயம் அடுத்தகட்டத்தை எட்டியிருக்கின்றது. சிவில் சமூகத்தினர் இது தொடர்பில் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்தத் தொடங்கியிருக்கின்றனர். சிவில் சமூகத்தைப் பொறுத்தவரையில் என்ன நோக்கத்துக்காக தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றனர். தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்போர் அல்லது அதனால் கலக்கமடைந்திருப்போர் தமது நிலைப்பாட்டை என்னவென்று பகிரங்கப்படுத்தவில்லை. ஆனால் பொத்தம் பொதுவாக தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்படுவதை எதிர்க்கின்றனர். அவர்களால் தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த முடியவில்லை. மாறாக தமிழ்ப் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரிப்பவர்களால் எந்தச் சிங்கள வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்கிடவேண்டும் என்பதையும் சொல்லமுடியவில்லை. அவர்களால் சொல்லவும் முடியாது. ஏனெனில் எந்தவொரு சிங்கள வேட்பாளரும் தமிழ் மக்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகளைக்கூட ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதனால்தான் எந்தவொரு சிங்கள வேட்பாளரையும் ஆதரிக்குமாறு, தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்களால் சொல்ல முடியாமல் உள்ளது. ஆனால், தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்க்கவேண்டும் என்ற குருட்டுவாதத்தை மாத்திரம் அவர்கள் முன்வைக்கின்றனர்.

தலைமை என்பது மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். மக்கள் நினைப்பதை அல்லது விரும்புவதன் பின்னால் செல்வதல்ல. மக்களுக்கு எதுதேவை என்பதை அவர்களுக்கு அறிவூட்டுவதே தலைமைக்கு அழகு. தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்திலும் தமிழ் மக்களை அறிவூட்டவேண்டிய தேவை தமிழ் சிவில் சமூகத்துக்கும், தமிழ் அரசியல் தரப்புகளுக்கும் உண்டு. மக்கள் இதுவரை காலமும் ஜனாதிபதித் தேர்தல்களில் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்தே பழகியவர்கள். அவர்கள் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஏன் ஆதரிக்க வேண்டும் என்று கேட்பது இயல்பானது. இவ்வாறான சூழலில் தலைமைகள் என்று சொல்வோர் மக்களை தெளிவுபடுத்தவேண்டும். தமிழ்ப் பொதுவேட்பாளரை இம்முறை முன்னிறுத்துவதன் தேவை என்ன என்பதை உணரச்செய்யவேண்டும். தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் தமிழ் மக்களுக்கு இம்முறை புதிது என்பதால், மக்கள் வாக்களிப்பார்களா? இல்லையா? என்ற குழப்பம் அரசியல் கட்சிகள் மத்தியில் உண்டு. ஏனைய தேர்தல்களில் இல்லாத ஒரு பதற்றம் இந்த விடயத்தில் அரசியல் கட்சிகளிடத்தில் காணப்படுகின்றது. இது தேவையற்ற பதற்றம். மக்கள் முன்பாக தமிழ்ப் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை கொண்டுசென்று சேர்க்க வேண்டியது தான் அரசியல் கட்சிகள் செய்யவேண்டியது. அதைச் செய்வதற்குப் பின்னடிக்கக்கூடாது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டைக் குழப்புவதற்கு பல சக்திகளும் முயற்சிக்கும். தமிழ்ப் பொது வேட்பாளரால் எந்தத் தரப்புகளுக்குப் பாதிப்போ அந்தத் தரப்புகள் நிச்சயம் இதைக் குழப்பவே செய்யும். தமிழ் மக்கள் மத்தியில், தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான நடைமுறைச்சாத்தியமற்ற பல கதைகள் உருவாக்கப் படவும்கூடும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் பேச ஆரம்பிக்கப்பட்டபோது, ராஜபக்சக்களுக்கே அது வாய்ப்பு என்ற கருத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் முன்வைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கருத்துத் தவறானது என்பதையும், அது வெறும் பூச்சாண்டித்தனமானது என்பதையும் பலரும் ஆதாரங்களோடு முன்வைத்ததால், அந்தக்கருத்து காணாமற் போய்விட்டது. பொய்யான நிலைப்பாடுகளை முன்வைத்து தமிழ் மக்களைக் குழப்ப முயல்வோர் இனியாவது ஒதுங்கியிருப்பது நல்லது.




# மின்கட்டணத்தை குறைக்கப் பரிந்துரை

**கொழும்பு, மே 7**

**பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைத் தணிப்பதற்கான துறைசார் மேற்பார்வைக்கான நாடாளுமன்றக் குழு, மின் கட்டணத்தை மேலும் 20 சதவீதம் குறைக்க பரிந்துரைத்துள்ளது.**

மின்சாரசபைக்கு கிடைக்கும் இலாபத்தை கருத்தில் கொண்டு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் மின்சாரசபை என்பன உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென துறைசார் மேற்பார்வைக்கான நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் மக்களின் பொருளாதார சிரமங்களை ஓரளவுக்கு குறைக்கமுடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## கடன் வட்டியால் திண்டாடும் அரசு

### மத்தியவங்கி தகவல்

பழைய கடன் மற்றும் வட்டியைச் செலுத்துவதற்கு அரசாங்கம் புதிய கடன்களைப் பெறவேண்டியுள்ளது. அதனால் கடனைச் செலுத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இலங்கை மத்தியவங்கியின் சமீபத்திய வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் அரசாங்கத்தின் பழைய கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காக 2 ஆயிரத்து 455 பில்லியன் ரூபா தேவைப்பட்டது. அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு பணம் இல்லாத காரணத்தினால் 2 ஆயிரத்து 282.3 பில்லியன் ரூபா புதிய கடனாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. அதற்கமைய, 1787 பில்லியன் ரூபா உள்நாட்டுக் கடனாகவும் 494 பில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடனாகவும் பெறப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## வறட்சியால் 5ஆயிரம் பேர் பாதிப்பு

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 3 மாவட்டங்களில் 4 ஆயிரத்து 982 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத் துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கேகாலை, கிளிநொச்சி - திருகோணமலை மாவட்டங்களில் ஆயிரத்து 542 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 982 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-இ)

## ஏ.ஐ. மூலம் சிங்களச் செய்தி

கொழும்பு, மே 7

ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலங்கையில் முதல் தடவையாக சிங்கள மொழியில் செய்தி அறிக்கையை இலங்கை அரச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ரூபவாஹினி) வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

## வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் விற்பனை

அரசாங்கத்தின் நிர்வாக மட்டத்திலான அதிகாரிகள் சுமார் 200 பேர் அவர்களுக்கு வழங்கப்பட்ட வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்துள்ளனர். சில நாள்களுக்கு முன்னர் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களைப் பொருளாதார நெருக்கடி காரணமாக சுமார் இரண்டு தொடக்கம் மூன்று இலட்சங்களுக்கு, வாகன விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

### நாளை

**08.05.2024**

**புதன்கிழமை**

**சித்திரை - 25**

சுபநேரம் : 04.25 - 05.55

ராகுகாலம் : 11.55 - 01.25

### நாளொரு நல்வார்த்தை


**எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.**

**ஜேம்ஸ் ஆலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேஷம்

# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)



காலபுருஷ தத்துவத்தில் முதல் ராசி மேஷம். இதில் அசுவினி, பரணி, கிருத்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்கள் அடக்கம். செவ்வாயை ராசிநாதனாகக் கொண்ட மேஷராசிக்காரர்கள் அனைத்திலும் முன்னணியில் இருக்க முயல்பவர்கள். அப்படிப்பட்டவர்களைக் கடந்த ஓர் ஆண்டாக ராசிக்குள் அமர்ந்த குருபகவான் முடக்கினார். இதனால் பணவரவில் தாமதம், வேலை பதவிகள் கிடைப்பதில் தடை, ஆரோக்கியத்தில் தொடர்ந்து பிரச்சினை என்று ஏதேனும் ஒன்று இருந்துகொண்டே இருந்தது. இந்த ஆண்டு மே முதலாம் திகதி முதல் குருபகவான் மேஷத்தில் இருந்து ரிஷப ராசிக்குள் அடியெடுத்துவைக்க இருக்கிறார். இனி அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபடுவீர்கள். தடைப்பட்ட பதவி, வேலை, அரசு வழியில் அனுகூலம் ஆகியன கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அந்நியோன்யமும் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். திருமணம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மேஷ ராசி அன்பர்களுக்குத் திருமணம் கூடிவரும். குழந்தைப் பாக்கியத்துக்காக இதுவரை பரிகாரங்கள், வைத்தியங்கள் என்று செய்துபார்த்து ஏமாந்து போயிருந்தால் இந்த ஆண்டு உங்களுக்கு அழகான குழந்தை பிறக்க வாய்ப்புண்டு.

இதுவரை அடுத்தவர்கள் புண்படும்படி பேசி பலரின் நட்புகளை இழந்தீர்களே... இனிபேச்சில் இனிமை கூடும். சாமர்த்தியமாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். நினைத்த காரியங்கள் வெற்றியாகும். செல்வம் பலவழிகளிலும் வரும். வீடு மனை வாங்கும் ஆவல் பிறக்கும்.

**குரு பார்வை பலன்கள்**

குருபகவானின் பார்வை 6,8,10 ஆகிய வீடுகளில் விழுகிறது. 6 ஆம் வீடான கன்னியை குருபார்ப்பதால் இனி கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். வீடு வாங்கப் புதிய கடன் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். பிரச்சினை கொடுத்த சத்ரு இனி ஓடி ஒளிவார். மனதில் இறைசிந்தனை அதிகரிக்கும்.

குருபகவான் 8 ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். ஆயுள் விருத்தியாகும்.

குருபகவானின் பார்வை 10 ஆம் வீட்டில் விழுவதால் உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். புதிய வேலை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆகியன தேடிவரும். தொல்லைதந்த சக ஊழியர்கள், அதிகாரிகள் மாறிப்போவார்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

1.5.2024 முதல் 12.6.2024 வரை உங்கள் பூர்வ புண்ணியாதிபதியான சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் குழந்தையில்லாதவர்களுக்குக் குழந்தை பாக்கியம் கிட்டும். பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் நீங்கும். அரசுக் காரியங்கள் விரைந்து முடியும். விலையுயர்ந்த மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளை அவர்கள் ஆசைப்பட்ட கல்வி நிறுவனத்தில் சேர்ப்பீர்கள். அதிக வட்டிக் கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். நட்பு வட்டாரம் விரியும்.

12.6.2024 முதல் 19.8.2024 வரை மற்றும் 2.12.2024 முதல் 5.4.2025 வரை உங்கள் சுகாதிபதியான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் காற்றோட்டம், தண்ணீர் வசதியுள்ள வீட்டிற்கு குடிபுகுவீர்கள். தாயாருக்கு இருந்த மூட்டுவலி, நெஞ்சு வலி குறையும். அவருடன் இருந்த மனக்கசப்புகளும் நீங்கும். கலை, இசையில் நாட்டம் பிறக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். கோழித்தூக்கம் போய், இனி நிம்மதியான தூக்கம் வரும்.

19.8.2024 முதல் 2.12.2024 வரை மற்றும் 5.4.2025 முதல் 14.5.2025 வரை உங்கள் ராசி நாதனான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குருபகாவன் செல்வதால் உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சகோதரிக்குத் திருமணம் முடியும். வெளிமாநிலப் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். புதிதாக வீடு, மனை வாங்குவீர்கள். ஆனால் கொஞ்சம் அலைச்சலும், செலவினங்களும் இருந்து கொண்டேயிருக்கும்.

**வியாபாரம்:** உங்கள் ரசனைக்கேற்றபடி கடையை அலங்கரிப்பீர்கள். வாடிக்கையாளர்களும் விரும்பி வருவார்கள். பழைய கடன்கள் எளிதாக வசூலாகும். வேலையாட்கள் பொறுப்பாக நடந்துகொள்வார்கள். மார்ச், ஏப்ரல் மாதங்களில் லாபம் அதிகரிக்கும். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்கும். கெமிக்கல், கமிஷன், ஹோட்டல், பைனான்ஸ் வகைகளால் லாபமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் விலகிச் சென்ற பங்குதாரர்கள் தேடி வருவார்கள்.

**உத்தியோகம்:** எதற்கெடுத்தாலும் உங்களையே குற்றம் சொல்லிக் கொண்டிருந்த மேலதிகாரி இனிப் பணிந்து போவார். சக ஊழியர்கள் உங்களை ஏளனப் படுத்திப் பேசினார்களே! இனி உங்களை மதிப்பார்கள். பதவியுயர்வு சம்பந்தப்பட்ட வழக்கில் உங்கள் பக்கம் வெற்றி கிடைக்கும். சில வாய்ப்புகள் தேடி வரும். கணினித் துறையினர்கள் இழந்த சலுகைகளை மீண்டும் பெறுவார்கள்.

**இந்த குரு மாற்றம் பிரச்சினைகளின் பிடியிலிருந்து விடுபட வைப்பதுடன் வாடியிருந்த உங்கள் வாழ்வில் வசந்தத்தை வாரி வழங்குவதாக அமையும்.**

## சொற்பொழிவுகள்

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்த சுக்கிர வாரச் சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதரின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும் இடம்பெறவுள்ளன. இளஞ்சைவப்புலவர் பிரசங்கசுடர் க. கயிலைவாசன் 'தொண்டு நெறி பரப்பிய நாயனார்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவை ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-இ)

*** *** ***

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர் பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் 'மாணிக்கவாசகரும் திருவகவலும்' எனும் விடயப் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-இ)

## நூல் வெளியீடு

கோண்டாவில், மே 7

அமரர் செல்லப்பா நடராசா எழுதிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, நெட்டிலைப்பாய் வாசகர் வட்டம் மற்றும் இணுவில் கலை இலக்கிய வட்டம் என்பவற்றின் ஏற்பாட்டில், வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.15 மணிக்கு இடம்பெறவுள்ளது. (559)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் புதிய முயற்சிகள் இழுபறிக்குப் பின் சாதகமாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்கள் மூலம் பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** இன்று மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் செலவுகளை சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**சிம்மம்:** சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எப்போதும்போல் இருந்தாலும் பணியாளர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** தந்தையால் ஆதாயம் கிடைக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் மூலம் சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாகமுடியும். மன இறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** பணவரவு உண்டு. செலவுகளும் குறைவாகவே இருக்கும். என்றாலும் பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கவனமாக இருக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்றுச் சோர்வு உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் விருப்பப்படி நடந்து கொள்வார்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐஸ்ஸுடன் கைதான நபர் பொலிஸ் தடுப்புக் காவலில்

ஐஸ் போதைப் பொருளுடன் சாவகச்சேரியில் கைதான இளைஞரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க சாவகச்சேரி நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் 70 மில்லிகிராம் ஐஸ் போதையுடன் கைதான இளைஞரே இவ்வாறு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-125)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லத்துரை வீதியில் **காணிகள் விற்பனைக்கு உண்டு. 6 பரப்பும், 3 பரப்பும், வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் உகந்தது.** தரகர் தேவையில்லை. (CR/42336) J-1

தொடர்பு:- **074 010 6595**

## மணமகன் தேவை

2003 ல் பிறந்த கனடா சிற்றிசன் மணமகளிற்கு A/L படித்த தொழில் தகைமை உடைய (V) மணமகன் இலங்கையில் அல்லது கனடாவில் தேவை.

**துர்க்கா திருமண சேவை**

**077 818 5978** (CS/54968) J-1

## கட்டடம் வாடகைக்கு

K.K.S வீதி, சுன்னாகத்தில் யூனியன் வங்கியின் மேல் தளம் வாடகைக்கு விடப்படும். (cs.54961) (N-1)

**077 398 5120**

## கடை வாடகைக்கு உண்டு

K.K.S வீதி, தெல்லிப்பளைச் சந்திக்கு மிக அருகாமையில் கட்டடம் வாடகைக்கு உண்டு. நிதி நிறுவனங்கள் மற்றும் புடைவைக் கடைக்கு உகந்தது. (cs.54961) (N-1)

**077 398 5120**


## கேள்வி அறிவித்தல்
## மேலதிக முத்திரை தீர்வை - 2024
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலிகாமம் வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள். நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.05.07 – 2024.05.21 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து** ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.05.22 ஆம் திகதி 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள் அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக் கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.05.14 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/01/302/PSDG(SD)/2024 | வீதி புனரமைத்தல் வேரவில் வீதி - இளவாலை வடக்கு | 2.96 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 23.07.2024 | 30,000.00 | Till 20.08.2024 |

**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறு வரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)**
**07.05.2024**

(cr 42372 (N.1)

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

தோற்றம்
28 . 05 . 1944



மறைவு
05 . 05 . 2024

### ஆறுமுகம் மகாலிங்கம் (செட்டி)

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், செழியன் வீதி ஓட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகாலிங்கம் நேற்று முன்தினம் (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகபூரணம் தம்பதியரின் மருமகனும், ருக்குமணியின் பாசமிகு கணவரும், சத்தியபாமா, சத்தியசிவம், சத்தியகரன், காலஞ்சென்ற சத்திசேகரன் மற்றும் சத்தியபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தயாபரன், ஈசா, விஜிதா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான கண்ணையா, சின்னையா, பாக்கியம், சரஸ்வதி, தங்கமுத்து மற்றும் நாகரெத்தினம், மகாதேவி, பரமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கோபிநாத், அபிநாத், கேமநாத், சாயிஷா, நிதுஸ்கா, ஜதுஷஜா, சாத்விகா ஆகியோரின் பேரனும், ஸ்ராலிங்ராசா காலஞ்சென்ற காங்கேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 262 7879**
**077 326 5345**

**42/93 செழியன் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

(CS/54966) J-1

## கேள்வி அறிவித்தல்

**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது தனது எரிபாருள் நிலைய முன்புற நிலம் புனரமைப்புக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகளை கோருகின்றது.**

1. கேள்விதாரர் வலிதான பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம். எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமைப் பணிமனையுடன் (தொலைபேசி இலக்கம் 0212050321) தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை 08.05.2024 திகதி முதல் 15.05.2024 திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்வியாளர்கள் கேள்வி ஆவணங்களின் ஆங்கில மொழி மூலமான தொகுதியினை தலைமைப்பணிமனை தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம். எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து 08.05.2024 திகதி முதல் 15.05.2024 வரை காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா ஆயிரம் (1000.00) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விகள் யாவும் (மூலம், பிரதி) தலைவர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 16.05.2024 திகதி காலை 10.00மணிக்கு அல்லது அதற்கு முன்பாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது சங்கத்தின் பெறுகை பெட்டியினிலோ இடல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "எரிபாருள் நிலைய முன்புற நிலம் புனரமைப்பும் கேள்வி கோரல்" என தலைப்பிட்டு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். 16.05.2024ம் திகதி காலை 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.
5. தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

**தலைவர்,**
**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கொடிகாமம்.**
**06.05.2024**

(cr. 42371) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல் வெளியீடு

யாழ்., மே 7

எழுத்தாளரும், ஊடகவியலாளருமான அலெக்ஸ் பரந்தாமனின் 'கடலலைகளை மேவிய கதை' நாவல் வெளியீட்டு விழா ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன் தலைமையில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.

(ஒ-இ)


## பணியில் சிறந்து உயர்வுபெற வாழ்த்துகின்றோம்




பொறியியலாளர்

**திரு.திருபாலசிங்கம் பாரதிதாசன்**

(B.Eng (India), M.Eng (Moratuwa)
M.Sc Hydrology and Water Resources
(UNESCO-IHE-DELFT), MBA(Rajarata),
C.Eng (SL) and FIE (SL)

**"பதவி நிலை உச்சம் தொடும் பாரதிதாசன்
பண்பினால் சிறந்த நேர் நிலையாளன்
தமிழின உணர்வுடன் செயற்படும் வீரன்
தேசத்தில் காண்கிறார் உயர் வகி பாகம்"**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் புதிய பொது முகாமையாளராக நேற்றைய தினம் (திங்கட்கிழமை - 06.05.2024) கொழும்பில் பதவியேற்ற எமது மதிப்பார்ந்த எந்திரி திருபாலசிங்கம் பாரதிதாசன் அவர்கள் தன் பணியில் சிறந்து மேன்மேலும் உயர்வு பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்

**திட்டப்பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம்
யாழ்ப்பாணம்.**


## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## பகிரங்க அறிவித்தல்

### உப பற்றுச்சீட்டுப் புத்தக இலக்கங்களின் செயலிழப்புத் தொடர்பானது

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 33774 தொடக்கம் 33800 வரையான அடியிதழ் இலக்கங்களைக் கொண்ட உப பற்றுச்சீட்டுக்கள் செயலிழப்புச் செய்யப்படுகின்றன. இவ் இலக்கங்களைக் கொண்ட பற்றுச் சீட்டுக்களை யாராவது பெற்றிருந்தால் உடனடியாக அறியத்தரவும்.

**செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.**

**தொடர்பு இல :- 021-229 0001**

(cr.42373) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் திவச ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 19.04.2023 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் சரவணமுத்து தங்கராஜா (விஎஸ்ரி)**

**(ஓய்வூதியர், கல்வித் திணைக்களம், முன்னாள் சிரேஸ்ட உதவி ஆசிரியர், உதயன் பத்திரிகை)**


அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.05.2024) முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

**குடும்பத்தினர்.**
(CS/431) J-1 021 223 0670, 077 386 7167

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 07 . 1945



இறப்பு 05 . 05 . 2024

**வேல்முருகேசு பத்மநாதன்**

**(முன்னாள் உரிமையாளர் லிபேட்டி மோட்டர் ஹவுஸ், நெல்லியடி - அக்கா கடை )**

பலாங்கொடையைப் பிறப்பிடமாகவும், கணையன்தோட்டம் புலோலி கிழக்கு பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட வேல்முருகேசு பத்மநாதன் அவர்கள் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேல்முருகேசு - சுந்தராம்பாள் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரி (முன்னாள் உரிமையாளர் - லிபேட்டி மோட்டர் ஹவுஸ் நெல்லியடி) அவர்களின் பாசமிகு கணவரும், தமயந்தி, ரூபகிருஷ்ணா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வின்சன், ஜூலியன், தனுசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைஷ்ணவி, சைந்தவி, ராகவி, டீனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விஸ்வநாதன், லோகநாதன், ஞானாம்பாள், கனகாம்சம் மற்றும் சௌந்தரியம்மாள், சிவலட்சுமி, சறோஜினி, சற்குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் சுப்பிரமணியம், சின்னையா, நடராஜா, தனசாமி, சண்முகவள்ளி, மஞ்சுளாதேவி, கமலாம்பிகை, சீதாதேவி, சுப்பிரமணியம் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), இலக்குமிதேவி, ருக்மணிதேவி, காலஞ்சென்ற பார்வதிதேவி, மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2024) புதன்கிழமை காலை 07.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:
ப.ரூபகிருஷ்ணா - மகன்
077 719 6472**

**கணையன் தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.** (CR/42374) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 03 . 1942



மறைவு 03 . 05 . 2024

**விநாயகமூர்த்தி பராசக்தி**

கொக்குவில் மேற்கு, சிவகுருலேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி பராசக்தி அவர்கள் கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், ஞானாம்பிகை, காலஞ்சென்ற கலைவாணி மற்றும் ஞானசூரியன் (லண்டன்), ஞானசம்பந்தன் (சுவிஸ்), ஞானசொரூபன், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ஞானகுமார் (சுவிஸ்), ஞானேந்திரன் (உரிமையாளர், யாழ்ரன் மல்ரி சென்ரர்), ஞானகலை (கனடா), ஞானேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராஜா, விம்லாதேவி, ருசானி, சிவரேகா, ஜெயறமணி, துரைசிங்கம், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிசானி, சமந்தா, நிலானி, றக்ஷன், நிக்ஷன், மினோஜா, மகனிஹா, விதுஷன், லஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற S.R.அன்னலிங்கம் மற்றும் தவமணி காலஞ்சென்றவர்களான S.R.மகாலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: நேற்று (06.05.2024) வெளியான விளம்பரத்தில் "இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும்" என்பதற்குப் பதிலாக "இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்" எனத் தவறுதலாக பிரசுரமாகி விட்டது.

**சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.** (CR/ 42373) (N-1)

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**BOC பிட்ட பிட்ட ரட்ட தேகி Season 3 சீட்டிழுப்பு**

பணப்பரிமாற்ற வரலாற்றில் ஆகக்கூடிய பெறுமதிமிக்க பரிசான வீட்டுத் தளபாடங்களுடன் கூடிய 3 கோடி ரூபாய் பெறுமதியான சுப்பர் வீட்டின் வெற்றியாளர்

**திரு. கே. கே. ருவன் சிந்தக அவர்களுக்கு**

**இலங்கை வங்கியின் மனமார்ந்த வாழ்த்துகள்!**

இதுபோன்ற சுப்பர் பரிசுகளை அதிகமதிகம் வெல்ல நீங்களும் உங்கள் வெளிநாட்டுப் பணத்தை இலங்கை வங்கிக்கே அனுப்புங்கள்.

இறுதிச் சீட்டிழுப்பு மற்றும் பரிசு தொடர்பாக பார்வையிட இங்கே Scan செய்யவும்

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெள்ளை ஈக்கள் தீவிரப்பரவல்: தேங்காய்ப்பால் இறக்குமதியாகும்

## யாழ்ப்பாண விவசாயிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 7

**வடமாகாணத்தில் வெள்ளை ஈக்களின் தாக்கம் தீவிரமாகியுள்ளது. அவற்றைக் கட்டுப்படுத்த தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தேங்காய்ப்பாலை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டி ஏற்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகள் எச்சரித்துள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகள் குழுக்கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:

தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் பரவல் ஆரம்பித்து ஓராண்டு கடந்துள்ளது. ஆனால் இன்னமும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. தென்னை மரங்களில் உள்ள ஓலைகளை வெட்டுவதன்மூலம் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துவதே தற்போதுள்ள ஆகப்பெரும் கட்டுப்பாட்டு முயற்சியாக உள்ளது. இதனால் தென்னைகளின் உற்பத்தித் திறன் குறைவடைந்துள்ளது. ஒவ்வொரு தடவையும் மாவட்ட விவசாயக் கூட்டங்களுக்கு வந்துவிட்டு, வெள்ளை ஈக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கதைத்துவிட்டும், புள்ளி விவரங்களைக் காண்பித்துவிட்டும் செல்கின்றார்களே தவிர அவற்றைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று எந்தத் தகவலும் இல்லை.

சபையால் முடியாவிட்டால் வெளிநாட்டில் தொடர்புகொண்டு இதற்குரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெங்காயப் புழுத்தாக்கம் விவசாயத் திணைக்களத்தால் வெளிநாட்டு இறக்குமதி மருந்தாலேயே கட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே இவ்வாறான சடுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இன்னும் தீவிரமாகும் - என்றனர். (ம-125)

# வேகமாக பரவிவரும் வைரஸ் காய்ச்சல்

## மக்கள் அவதானம்

கொழும்பு, மே 7

நாடு முழுவதும் வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வரும் நிலையில் மக்கள் மக்கள் குழுவாக கூடுவதை தவிர்க்கவேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த வைரஸ் சுவாசக் குழாய் ஊடாக சென்று இருமல், சளி, காய்ச்சல் மற்றும் உடல்வலி என்பவற்றை உண்டாகுகின்றன.

இரண்டு அல்லது மூன்று நாள்களில் வைரஸ் நிலைமை தணிந்தாலும், சில நோயாளிகளுக்கு ஓரிரு மாதங்களுக்கு இருமல் , சளி, சுவாச நோய்கள் இருப்பதாக மருத்துவ அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வைரஸும் இன்புளுவென்சாவின் மாறுபாடாக அடையாளம் காணப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து முடிந்தவரை விலகி இருக்கவேண்டும்.

அத்துடன் பொதுமக்கள் குழுவாகக் கூடுவதைத் தவிர்ப்பதுடன் முகக்கவசம் அணிந்து நோய்ப் பரவலைத் தடுக்கவேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்தினர். (ச-இ)

# சோதியாவின் தாயார் காலமானார்!



யாழ்ப்பாணம், மே 7

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் முதல் தளபதி மேஜர் சோதியாவின் (வசந்தி) தாயார் மிக்கேல்ராசா மேரி அம்மா நேற்றுக் காலமானார். வடமராட்சி நெல்லியடி பகுதியில் வசித்து வந்த நிலையில் முதுமை காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவால் நேற்றுத் திங்கட்கிழமை அவர் காலமானார். (ம-100)

# நிவாட் கப்ராலுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு இம்மாதம்

அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான வழக்கு ஒன்றின் தீர்ப்பு இந்த மாதம் 31ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. 2012ஆம் ஆண்டு கிரேக்க பிணைமுறி முதலீட்டில் 1.8 பில்லியன் ரூபா இலங்கை அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 31ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. (ம-6)



# தாயுமானவர் வித்தியாலயத்துக்கு குடிதண்ணீர் வசதிகள்!

கொழும்பு, மே 7

செட்டிக்குளம் பூசணிப்பிட்டி தாயுமானவர் வித்தியாலயத்துக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அடிப்படை வசதிகளற்று இந்தப் பாடசாலை காணப்பட்ட நிலையில், இணுவிலைச் சேர்ந்த சிவதர்சினி விக்னேஸ்வரன் குடும்பத்தினரால் இந்தக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (ச-555)

# நல்லூர் காரைக்காலில் உள்ள திண்மக்கழிவு நிலையத்தில் தீ!

நல்லூர் பிரதேசசபையின் திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விரைவாகப் பரவியதையடுத்து அந்தப் பகுதியிலும் அயற் குடியிருப்புகளிலும் அச்சமான சூழ்நிலை நிலவியது.

யாழ். மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் குறித்த பகுதிக்கு விரைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். புகையுடன் மேலெழுந்த தூசுகளும் துணிக்கைகளும் அயற் குடியிருப்புக்குள் சென்று விழுந்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச சபையினரால் குறித்த பகுதியில் திண்மக்கழிவுகளை தரம் பிரிப்பதற்காக நல்லூர் பிரதேச சபையின் காரைக்கால் பகுதியில் குறித்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதைத் திறந்து வைத்தார்.

தரம்பிரிப்பதற்கான மையமாக உள்ளபோதிலும், அவ்வாறான செயற்றிட்டங்கள் இடம்பெறுவதில்லை என்றும் அனைத்துக் குப்பைகளும் பொதுவாகவே கொட்டப்படுகின்றன என்றும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தத் திண்மக் கழிவகற்றல் நிலையத்தில் தீவிபத்து இடம்பெறுகின்றமை இதுடன் இரண்டாவது தடவையாகும். (ம-12)

# மன்னார்- கிழக்குக்கு எண்ணெய்க் குழாய்

## இந்தியத் தூதுவர் தகவல்

கொழும்பு, மே 7

தலைமன்னாரிலிருந்து கிழக்கு மாகாணத்துடன் புதிய எண்ணெய்க் குழாய் இணைப்பு ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஷ்ஜா அறிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் பயணம் மற்றும் தரைவழிப்பயணம் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்த அறிவிப்பை தூதுவர் சந்தோஷ் ஜா வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நில இணைப்பை மேற்கொள்ளும் திட்டத்துக்கு மேலதிகமாக, தென்னிந்தியாவில் இருந்து திருகோணமலைக்கு எண்ணெய்க் குழாய் அமைப்பது உட்பட எரிசக்தி துறையின் கூட்டு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே தலைமன்னாரிலிருந்து கிழக்கு மாகாணத்துடன் எண்ணெய்க் குழாய் இணைப்பதே இந்தியாவின் நோக்கமாகும் என்றும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை!

வவுனியா, மே 7

வவுனியா மாவட்டத்தில், ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்காகக் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், சமய வழிபாட்டுத்தலங்களிலும், பல்வேறு வைபவங்களிலும், விழாக்களிலும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதுதொடர்பாக சுகாதாரப் பிரிவினர், நகரசபை, பொலிஸ் திணைக்களம், மாவட்டச் செயலகம் ஆகியவற்றுக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மாணவர்களின் நலன் கருதி, ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உரிய ஒழுங்கு விதிகளையும் சட்ட ஏற்பாடுகளையும் பொலிஸார் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ப-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனாவுக்குள் புகுந்து குழுவொன்று அடாவடி!

## பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் நோயாளர்களுடன் முரண்பட்டதுடன், மருத்துவச் சேவைக்கு பெரும் பின்னடைவும் ஏற்படுத்தியதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததையடுத்து, அவருடைய நண்பர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட 20க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட குழுவினரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் இந்த அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பில் மருத்துவமனைத் தரப்பால் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். சந்தேகநபர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் விரைவில் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26-125)

# கிராம அலுவலர்கள் நேற்றுப் போராட்டம்!

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கிராம அலுவலர்கள் நாடளாவிய ரீதியில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொதுமக்கள் தங்களின் தேவைகளை நிவர்த்திக்க பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. நேற்றும் இன்றுமாக இரண்டு தினங்கள் இந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல கிராம அலுவலர்கள் (90 வீதமான) நேற்றையதினம் தங்களின் கடமைக்கு சுகவீன விடுமுறையை அறிவித்திருந்தனர். வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராம அலுவலர்களும் நேற்றுக் கடமைகளைப் புறக்கணித்திருந்தனர். (அ-ம-110)

## பொலிஸ் நிலையத்துக்குள் தாக்குதல்:

# வெளிநாட்டு நபரை உடன் கைதுசெய்க

## பொதுமக்கள் நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, மே 7

புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து பொதுமகனைத் தாக்கிய நபரைக் கைதுசெய்யுமாறும், அதற்கு உடந்தையாக இருந்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான நபர் உட்பட 40க்கும் மேற்பட்டோர் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் 'பொலிஸார் பக்கச் சார்பாக செயற்படக்கூடாது', 'குழாய்க் கிணறு ராசனை கைது செய்', 'பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து தாக்கியவருக்கு பாதுகாப்பு கொடுக்காதே', 'பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீதும் நடவடிக்கைவேண்டும்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இதனையடுத்து, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக 10 பேரை அழைத்து பேச்சு நடத்தினார். பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்குதல் நடத்திய வெளிநாட்டில் இருந்து வருகைதந்த நபரை 3 தினங்களுக்குள் கைதுசெய்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதியளித்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றிருந்தனர்.

கடந்த மாதம் 15ஆம் திகதி வவுனியா, சின்னப் பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த நபரை, புளியங்குளம் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட சில பொலிஸார் பிடித்து வைத்திருக்க, வெளிநாட்டில் இருந்து வருகைதந்திருந்த மேற்படி நபர் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்துத் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டமையும், பாதிக்கப்பட்ட நபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-18)

### வெப்பம்...

யாழ்ப்பாணத்தில் தற்போது அதீத வெப்பம் நிலவுகின்ற நிலையில், வெப்பத்தாலும் உணர் வெப்பத்தாலும் வெப்ப அலையாலும் பொதுமக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், வெப்ப அதிகரிப்பை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பான தெளிவூட்டலை வழங்குவதற்காக செய்தியாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் நேற்று நடத்தப்பட்டது. இதன்போதே பொதுமருத்துவ நிபுணர் ரி.பேரானந்தராஜா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது வெப்பத்தின் தாக்கம் தீவிரம் பெற்றுள்ளது. ஒரு மனிதனின் உடல் வெப்பநிலை 40.5 சென்ரிகிரேட் அல்லது 105 பரனைட் அளவைத் தாண்டுகின்றபோது தீவிரமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. வியர்வை அதிகரித்தல், வியர்க்குருக்கள் போடுதல், வியர்வை அதிகரிப்பால் உடலில் நீரின் அளவு குறைந்து மயக்கம் ஏற்படுதல் என்பன அவையாகும்.

இந்தநிலை தொடர்கின்றபோது, 'ஹீட் ஸ்ரோக்' ஏற்பட்டு நிலைமை பாரதூரமாகின்றது. இதைவிட சிறுநீரகம், இருதயம், சுவாசப்பை என்பன செயலிழக்கக் கூடிய சாத்தியங்களும் இந்த வெப்ப அதிகரிப்பால் ஏற்படுகின்றன. அத்துடன் குருதியில் சிறுதட்டுக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து நிலைமை பாரதூரமாக வாய்ப்புகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் மூளை செயலிழந்து மயக்கமடையும் சம்பவங்களும் அதிகம் நிகழும் வாய்ப்பும் உள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்களில் நான்கு, ஐந்து நோயாளர்கள் 'ஹீட் ஸ்ரோக்' காரணமாக உயிரிழந்துள்ளனர். அவர்கள் உயிரிழந்தமைக்கு அவர்களுக்கு இருந்த நோய் நிலைமைகளுக்கும் ஒரு காரணம் என்றாலும், வெப்பம் அவர்களின் நோய் நிலைமைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. எனவே வெப்பத்தின் பேராபத்தான தன்மையில் இருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ளமுடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளவேண்டும்.

**மரநடுகையே தீர்வு**

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனைகளின் அதிகரிப்பு மற்றும் அதிகளவிலான மரங்கள் அழிப்பு என்பனவற்றின் மூலம்தான் தற்பொழுது வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படுகிறது. எனவே மக்கள் அனைவரும் வீட்டுக்கு வீடு மரங்களை நட்டு சுற்றாடலை குளிர்மையாக வைத்திருக்கவேண்டும். குளிர்மையான பானங்களை அருந்தவேண்டும். 'ஹீட் ஸ்ரோக்' வராமல் இருப்பதற்கு வீட்டில் உள்ள வயோதிபர்களுக்கு போதிய நீர் ஆகாரங்களை வழங்கவேண்டும். தர்ப்பூசணி, வெள்ளரிப்பழம், தோடம்பழம் போன்ற பழங்களைக் கூடுதலாக உண்ணக் கொடுக்கவேண்டும். வயது போனவர்களுக்கு தண்ணீர்த் தாகம் எடுப்பது தெரியாது. எனவே நீர் ஆகாரங்களைத் தொடர்ச்சியாக வழங்கவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடலின் வெப்பத்தைக் குறைத்து 'ஹீட் ஸ்ரோக்' வராமல் தடுக்கமுடியும். அத்துடன் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவுவது, புருவங்களைக் கழுவுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் எமது உடலின் வெப்பநிலையை சடுதியாகக் குறைத்துக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும் - என்றார். (அ-ம-26-125-20)

### தண்டுவடம்...

களில் தெரியவந்துள்ளது. 2007ஆம் ஆண்டு முள்ளந்தண்டுப் பகுதியில் தோட்டா துளைத்த நிலையில், இடுப்புக்குக் கீழ் இயங்காமல் சக்கர நாற்காலியின் துணையுடன் அந்தப் பெண், தந்தை இல்லாத நிலையில் தயாரின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளார்.

குறித்த பெண் [illegible]

னின் போதை பழக்கத்தின் ஊடாக ஏற்பட்ட பழக்கத்தில் வீட்டுக்கு வந்து செல்லும் அயலவரான நபர் ஒருவரால் அந்தப் பெண் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதுடன், பாலியல் வன்புணர்வுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் வீட்டுக்குள் எவருமில்லாத நேரத்தில் அத்துமீறி நுழைந்த அந்த நபர், படுக்கையில் இருந்த பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார். சிறுநீர் வெளியேறுவதற்காக பொருத்தப்பட்டிருந்த குழாயை அந்தநபர் இழுத்து எறிந்ததையடுத்து, குறித்த பெண் கூக்குரலிட்டதால், வன்புணர்வு செய்ய முயற்சித்தவர் தப்பியோடியுள்ளார்.

கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்படிபெண் இறந்துகிடந்ததையடுத்து, தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபை வாசுதேவா கடந்த 4 ஆம் திகதி விசாரணையை மேற்கொண்டுள்ளார். இதன்போது அந்தப் பெண் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதுடன், கிருமித் தொற்று ஏற்பட்டு உடலில் பரவியமை காரணமாகவே உயிரிழப்பு சம்பவித்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-100)

### அம்மாவின்...

காணாமற்போனவரைத் தேடும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையில், தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்த அந்த நபர், தனது தாயாரை தான்தான் கழுத்தை நெரித்துக் கொன்றதாக விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

மருத்துவப் பரிசோதனையில் அந்தப் [illegible] நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பெண்ணின் உடலில் அளவுக்கதிகமான மாத்திரைக் கூறுகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26)

### மல்லாகத்தில்...

நேற்று முற்றுகையிடப்பட்ட நிலையில், அங்கிருந்து கால்நடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மல்லாகம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கொல்களம் ஒன்று இயங்கி வருவதாக தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் அந்த இடத்தை தமது முற்றுகைக்குள் கொண்டுவந்ததுடன் அங்கு கட்டப்பட்டிருந்த இரண்டு மாடுகளையும் மீட்டுள்ளனர்.

மாடுகளை இறைச்சியாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. இது தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, மீட்கப்பட்ட மாடுகளை அன்பு இல்லத்தில் வைத்துப் பராமரிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், சந்தேகநபரை இன்று முன்னிலையாகுமாறும் நீதிமன்றம் பணித்துள்ளது. (அ-ம-125-20)

### யாழ்...

50 மருத்துவ வெற்றிடங்களும், 50 தாதிய வெற்றிடங்களும், 75 சுகாதார சேவை உதவியாளர் வெற்றிடங்களும் காணப்படுகின்றன. இவற்றை நிவர்த்தித்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் இன்னமும் ஆளணி பூர்த்தியாக்கப்படவில்லை - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹைதராபாத்துக்கு பின்னடைவு மும்பை நேற்று அபார வெற்றி!

**புதுடில்லி, மே 7**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத்தைத் தோற்கடித்தது மும்பை இந்தியன்ஸ்.** மும்பையின் இந்த வெற்றியால் ஹைதராபாத்தின் பிளேஓப் கனவு இழுபறிப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி ஹெட்டின் அதிரடியால் பலமான ஆரம்பத்தைக் கண்டது. ஆனால் மறுமுனையில் அபிஷேக் சர்மா நிதானமாகவே விளையாடிக் கொண்டிருந்தார். 16 பந்துகளில் 11 ஓட்டங்களுடன் அபிஷேக் சர்மா ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சாவ்லா, பாண்டியா மற்றும் காம்போஜ் மூவரும் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு ஹைதாபாத்தின் விக்கெட்களைக் கைப்பற்றினார்கள். ஹெட் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர், பின்வரிசையில் கம்மின்ஸ் பெற்ற 35 (17) ஓட்டங்களே அதிகபட்சம். வேறெந்த வீரரும் நிலைக்கவில்லை. மயங்க் அகர்வால் 5, கிளாசன் 2 என அடுத்தடுத்து ஏமாற்ற 173 ஓட்டங்களை 8 விக்கெட்களை இழந்து பெற்றது ஹைதராபாத்.

மும்பை அணியின் ஆரம்ப வீரர்கள் மோசமான ஆரம்பத்தையே கொடுத்தனர். இஷான் 9, ரோகித் 4, நமன் 0 என ஆட்டமிழக்க 31 ஓட்டங்களில் மூன்று விக்கெட்களை இழந்தது மும்பை. அதன் பின்னர் இணைப்பாட்டத்தை அமைத்த சூரியக்குமார் யாதவ் மற்றும் திலக் வர்மா இருவரும் விக்கெட்டை இழக்காமல் ஹைதராபாத்தின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினார்கள். இணைப்பாட்டம் 100 கடந்த பின்னரும் விக்கெட் வீழ்ந்ததாக இல்லை. பவுண்டரி, சிக்சர் என விளாசிய சூரியக்குமார் யாதவ் சிக்சருடன் சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்டார். அவர் 102 ஓட்டங்களுடனும், திலக் வர்மா 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

(ம)


## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை "ஸ்கந்தா" பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 391 3859, 077 729 9212

(CS/54908) J-1

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/54971) J-1

074 173 7684

## பெயர்மாற்றம்

காளி கோவிலடி உடுவில் சுன்னாகத்தில் வசிக்கும் **தணிகாசலம் சாந்தா** ஆகிய நான் எனது பெயரை **தணிகாசலம் சாந்தி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தணிகாசலம் சாந்தி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/54965) J-1 **தணிகாசலம் சாந்தி**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

தொடர்பு :- 077 886 2927

(CS/375) J-1

## விற்பனைக்கு

தனியார் கல்வி நிலைய பனை மரம், சீற், கொட்டில்கள், வாங்கு, மேசைகள் விற்பனைக்கு.

077 759 3725
077 666 9950

## வேலையாள் தேவை

திருநெல்வேலி சந்தைப் பகுதியிலுள்ள கடைக்கு தேநீர் ஊற்றத் தெரிந்த வேலையாள் தேவை. அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

076 294 3552


## மரண அறிவித்தல்



தோற்றம் 13.12.1952 — மறைவு 06.05.2024

### திருமதி அமுதலிங்கம் கனகேஸ்வரி

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் வறுத்தலைவிளான் மற்றும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அமுதலிங்கம் கனகேஸ்வரி அவர்கள் நேற்று (06.05.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இளையபிள்ளை தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அரியரட்ணம் அமுதம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அமுதலிங்கத்தின் (அப்பன்) மனைவியாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தங்கராசா, இராசம்மா, துரைராசா, தியாகராசா மற்றும் செல்லம்மா சண்முகராசா, பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, யோகேஸ்வரி, மற்றும் சிவபாக்கியம் மற்றும் முத்துக்குமார், சிவமணி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், அமுதகலா, அமுதவிகாஸ், அமுதினி, அமுதராஜி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமலதாஸ், சிவகலா, சசிதரன், சுகந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், R.வனோஜிதன் (சட்டத்தரணி), லிக்ஷனா (சட்டத்தரணி), லக்ஷனா, டிலக்ஷன், டிலக்ஷனா, டில்ஷன், அபிவர்மண், துசிவர்மண், சஞ்சய்வர்மண், ஹதுர்ஷிகன், ஹர்சிகா, ஜோபிகா, அபின்ஷன், நிலுஜா, அன்சிக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு நண்பகல் 12.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
V.M.Road, பருத்தித்துறை. **குடும்பத்தினர்.**

(CS 434) A-1

## 16ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்

பிறப்பு 23 . 11 . 1954 — இறப்பு 22 . 04 . 2024



தேசப்பற்றாளர் – சமாதான நீதவான்
பத்தர்

### இராஜதுரை கணேசராசா

(முன்னாள் மாநகர சபை உறுப்பினர்)

கடந்த 22.04.2024 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறப்புச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் பத்திரிகைகள், வெளிநாட்டு ஊடகங்கள், பதாகைகள் மூலம் தமது அஞ்சலியைச் செலுத்தியவர்களுக்கும் மாலைகள் அணிவித்து மலர்வளையங்கள் வைத்து வணக்கம் செலுத்தியவர்களுக்கும் மரணச்சடங்கின் போது அஞ்சலி உரை நிகழ்த்திய அரசியல் பிரமுகர்கள், பெரியோர்கள் மற்றும் அன்னாரின் பூதவுடலுக்கு திருவாசகம் பாடி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல விதத்திலும் உதவிகள் பல புரிந்த அரசியல் பிரமுகர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், கிராம மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
0094 760 012 106
0044 745 671 0501

82/2B, சிவப்பிரகாசம் வீதி
வண்ணார்பண்ணை

(CS/54970) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.